பத்திரிக்கைச் செய்தி வெளியீடு

30.06.2026

ஆண்டு ஊதிய உயர்வு வழங்க ரூ.30,000/- லஞ்சம் கேட்டு வாங்கிய தலைமை ஆசிர்யர் கைது

புகார்தாரர் திருச்சி மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரரின் மனைவி ஆசிரியராக பாய்லர் பிளாண்ட் மேல்நிலைப்பள்ளி, BHEL, திருவெறும்பூர், திருச்சி மாவட்டத்தில் வேலை பார்த்து வருகிறார். புகார்தாரரின் மனைவி டெட் பரிட்சை தேர்ச்சி பெற்றுள்ளார். புகார்தாரரின் மனைவி டெட் பரிட்சை தேர்ச்சி பெற்றுள்ளதால் ஆண்டு ஊதிய உயர்வு கோரி விண்ணப்பித்திருந்தார். விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து ஆண்டு ஊதிய உயர்வு வழங்க திரு.புகழேந்தி, தலைமை ஆசிரியர், தண்டலைபுதூர், முசிறி, திருச்சி மாவட்டம் (பொறுப்பு மாவட்ட கல்வி அதிகாரி, திருச்சி மாவட்டம்) அவர்கள் தனக்கு ரூ.30,000./ லஞ்சமாக தர வேண்டும் என வற்புறுத்தியுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை திருச்சி பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 30.06.2026, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.புகழேந்தி, தலைமை ஆசிரியர், அவர்கள் லஞ்ச பணம் ரூ.30,000/-யை புகார்தாரரிடமிருந்து பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.